Dt.: Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI
C. C.No.235 / 2020

DEPOSITION OF WITNESS : P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name : | அம்பிகா | Father's Name/ Husband Name : | கண்ணன் |
| Village | சிறப்பாறை | Taluk : | |
| Religion : | | Age : | |
| Calling : | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2024

(எதிரிகள் ஆஜர் )

முதல் விசாரணை

மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன் . நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் . அவர்கள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் . ஆஜர் எதிரிகளுக்கும் பொதுச்சுவர் சம்மந்தமாக பிரச்சினை இருந்தது . கடந்த 21.10.2020-ம் தேதி இரவு 11.00 மணியளவில் எனது வீட்டின் முன்பு நான் எனது மாமியார் செல்லத்தாய் , நாத்தனார் சுதா , நாத்தனார் மகள் தனலட்சுமி ஆகியோர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது , கண்ணன் என்ற பால்பாண்டி , பாண்டி, கார்த்திக் மூவரும் எங்களை பார்த்து தேவிடியா , கண்டாரஓழி என்று அசிங்கமாக பேசி, பால்பாண்டி என்னை கல்லால் என் நெற்றியில் எறிந்தார் . என் மாமியாரை கார்த்தி கல்லால் நெஞ்சில் குத்தினார் . பாண்டி , தனலட்சுமியை அடித்து கீழே தள்ளிவிட்டு கம்பால் தொடையில் அடித்தார் . அப்போது இரவு நேரம் என்பதால் எங்களுக்கு பஸ்போக்குவரத்து வசதி இல்லை .நாங்கள் மறுநாள் 22.10.2020-ம் தேதி மயிலாடும்பாறை காவல்நிலையம் சென்றபோது அவர்கள் எங்களை க .விலக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் . மருத்துவமனையில் நாங்கள் சொல்ல சொல்ல போலீசார் புகார் வாக்குமூலம் எழுதினார்கள். அதில் நான் கையொப்பம்

செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கூறியதுதான் . அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் . **புகார் வாக்குமூலம் அ .சா.ஆ.1.** நான் மருத்துவமனையில் ஒருவாரம் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

21.10.2020–ம் தேதி இரவு 11.00 மணிக்கு சம்பவம் நடந்தது என்றால் சரிதான் . காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான் . மருத்துவமனையில் புகார் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் மறுநாள் வாங்கினார்கள் . எங்கள் வீடு தகர வீடு என்றும் அதில் கற்கள் இருக்கிறது என்றால் சரிதான் . தகரத்தின் மீதுள்ள கற்கள் நகரும்போது சத்தம் கேட்குமா என்றால் கேட்காது . மருத்துவமனையில் மருத்துவரிடம் 22.10.2020–ம் தேதி 11.00 மணிக்கு சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளில் பாண்டி கம்பு , கண்ணன் கல்லு, மற்றொருவரும் கல்லும் என ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆயுதம் வைத்திருந்தார்கள் . எங்கள் வீட்டுக்கு அருகில் சுதா, செல்லத்தாய், தனலட்சுமி அவர்களின் வீடு இல்லை என்றால் சரியல்ல . என் வீட்டுக்கு பக்கத்தில் எதிரிகள் வீடு இல்லை என்றால் சரியல்ல . என்வீட்டுக்கு பக்கத்தில் வலது புறம் எதிரிகள் வீடு என்றால் இருபுறமும் அவர்கள் வீடு உள்ளது . போலீசார் புகார் கொடுத்தபிறகு என்னை விசாரணை செய்யவில்லை என்றால் விசாரணை செய்தார்கள் . காவல்நிலையத்தில் வைத்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான் . மருத்துவமனையில் வாக்குமூலம் வாங்கினார்கள் . சம்பவம் நடைபெற்று மறுநாள் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான் . எதிரிகள் எங்கள் வீட்டில் கற்களை எடுத்து எறியவில்லை என்றாலும் அடித்துக்காயப்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல.

T PITCHAIRAJAN
Digitally signed by T PITCHAIRAJAN
Date: 2024.08.27 14:27:45 +0530

இந்த வாக்குமூலம் என்னால் சாட்சியளிப்பவரின் கூற்றுக்கு இணங்க தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்து என்னால் படித்துக்காண்பித்து சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
ஆண்டிபட்டி.

Dt.: Crl. Misc. Petition

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C. C.No.235 / 2020**

DEPOSITION OF WITNESS : P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்லத்தாய் | Father's Name/ Husband Name | : போஸ் |
| Village | சிறப்பாறை | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2024

(எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை**

மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன் . நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மருமகள். ஆஜர் எதிரிகளை தெரியும் . அவர்கள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். ஆஜர் எதிரிகளுக்கும் பொதுச்சுவர் சம்மந்தமாக பிரச்சினை இருந்தது. கடந்த 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு 11.00 மணியளவில் எனது வீட்டின் முன்பு நான் , அ.சா.1, மகள் சுதா, சுதாவின் மகள் தனலட்சுமி ஆகியோர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது , கண்ணன் என்ற பால்பாண்டி , பாண்டி, கார்த்திக் மூவரும் கற்களால் வீட்டின் தகரத்தின் மேல் எறிந்தார்கள் ஏன் என்று கேட்டோம். அப்போது மூவரும் எங்களை பார்த்து தேவிடியா , கொண்டி, கண்டாரஓழி என்று அசிங்கமாக பேசினார்கள் , பால்பாண்டி அம்பிகாவை கல்லால் என் நெற்றியில்கொண்டினார். என்னை கார்த்தி கல்லால் நெஞ்சில் குத்தினார் . பாண்டி , தனலட்சுமியை அடித்து கீழே தள்ளிவிட்டு கம்பால் தொடையில் அடித்தார் . அப்போது இரவு நேரம் என்பதால் எங்களுக்கு பஸ்போக்குவரத்து வசதி இல்லை. நாங்கள் மறுநாள் மயிலாடும்பாறை காவல்நிலையம் சென்றபோது அவர்கள் எங்களை க.விலக்கு

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் . மருத்துவமனையில் என்மருமகள் சொல்ல சொல்ல போலீசார் புகார் வாக்குமூலம் எழுதினார்கள் . நான் மருத்துவமனையில் 6 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

22.10.2020–ம் தேதி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான் . இந்த எதிரிகள் மூவரும் ஆளுக்கொரு ஆயுதம் வைத்திருந்தார்கள் . கிராமபுறத்தில் இரவு 11.00 தூங்கிவிடுவோம் என்றால் நாங்கள் முழித்திருந்தோம் . போலீசார் எங்கு வைத்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் க.விலக்கு மருத்துவமனையில் வைத்து என்மருமகளிடம் வாங்கினார்கள் . எங்களிடம் எதுவும் கையொப்பம் வாங்கவில்லை . எதிரிகள் வீட்டுக்கருகில் அ .சா1–ன் வீடு இல்லை என்றால் இருக்கிறது . அம்பிகா, வீடும் சுதா வீடும் பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான் . நாங்களாக கீழே விழுந்துகொண்டு எதிரிகள் மீதும் பொய்யான குற்றம் சொல்லுகிறோம் என்றால் சரியல்ல. 22.10.2020–ம் தேதி மருத்துவரிடம் சம்பவம் நடந்ததாக இரவு 11.00 மணிக்கு நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

T PITCHAIRAJAN — Digitally signed by T PITCHAIRAJAN Date: 2024.08.27 14:27:50 +0530

இந்த வாக்குமூலம் என்னால் சாட்சியளிப்பவரின் கூற்றுக்கு இணங்க தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்து என்னால் படித்துக்காண்பித்து சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
ஆண்டிபட்டி.

Dt.: Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C. C.No.235 / 2020**

DEPOSITION OF WITNESS : P.W.3

| | | | |
|---|---|---|---|
| Name : | தனலட்சுமி | Father's Name/ Husband Name : | செல்லப்பாண்டி |
| Village | சிறப்பாறை | Taluk : | |
| Religion : | | Age : | |
| Calling : | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2024

(எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை**

மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன் . நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அத்தை. அ.சா.2 எனது பாட்டி. ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் . ஆஜர் எதிரிகளுக்கும் பொதுச்சுவர் சம்மந்தமாக பிரச்சினை இருந்தது. கடந்த 21.10.2020–ம் தேதி இரவு 11.00 மணியளவில் எனது வீட்டின் முன்பு நான், அ.சா.1, அ.சா.2, என் அம்மா சுதா ஆகியோர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது, கண்ணன் என்ற பால்பாண்டி, பாண்டி, கார்த்திக் மூவரும் கற்களால் வீட்டின் தகரத்தின் மேல் எறிந்தார்கள் ஏன் என்று கேட்டோம் . அப்போது மூவரும் எங்களை பார்த்து தேவிடியா , கொண்டி, கண்டாரஓழி என்று அசிங்கமாக பேசினார்கள், பால்பாண்டி அ.சா.1–ஐ கல்லால் என் நெற்றியில் குத்தினார் . அ.சா.2–ஐ கார்த்தி கல்லால் நெஞ்சில் குத்தினார் . பாண்டி , என்னை அடித்து கீழே தள்ளிவிட்டு மட்டையால் தொடையில் அடித்தார். நாங்கள் மறுநாள் மயிலாடும்பாறை காவல்நிலையம் சென்றபோது அவர்கள் எங்களை க .விலக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மருத்துவமனையில் என்அத்தை சொல்ல சொல்ல போலீசார் புகார்

வாக்குமூலம் எழுதினார்கள் . நான் மருத்துவமனையில் ஒருவாரம் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அம்பிகா வீட்டுக்கருவில் எனக்கு வீடு உள்ளது சரிதான் . அம்பிகா என்பவருக்கும் பாண்டி என்பவர் வீடும் ஒருசுவற்றில் இல்லை என்றால் சரியல்ல. ஒரே சுவர்தான். காயம்பட்டு காவல்நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு , மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். 22.10.2020–ம் தேதி 11.00 மணிக்கு சம்பவம் நடந்ததாக மருத்துவரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எங்கள் 3 பேரை தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரிதான் . போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் மருத்துவமனையில் வைத்து வாங்கினார்கள். காவல்நிலையத்தில் வாங்கவில்லை என்றால் சரிதான் . என்னிடம் கையொப்பம் எதுவும் வாங்கவில்லைஎ ன்றால் சரிதான் . நானாக கீழே விழுந்துகொண்டு எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

T PITCHAIRAJAN
Digitally signed by T PITCHAIRAJAN
Date: 2024.08.27 14:27:57 +0530

இந்த வாக்குமூலம் என்னால் சாட்சியளிப்பவரின் கூற்றுக்கு இணங்க தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்து என்னால் படித்துக்காண்பித்து சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
ஆண்டிபட்டி.